**MCOP NO: 3925/2023** **DATE: 07.04.2026**

ம.சா : 2

பெயர் : திரு.கணபதி

த/பெ : திரு.சம்பந்தன்

வயது : 43

**முதல் விசாரணை**

நான் இந்த மனுவில் மனுதாரர் தரப்பு கண்ணுற்ற சாட்சி ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான், அதை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 17 ஐ தாக்கல் செய்கிறேன்.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நீதிமன்ற அழைப்பாணை பேரில் சாட்சியம் அளிக்க வரவில்லை. மனுதாரர் தரப்பில் கேட்டுகொண்டதன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். விபத்தை பார்த்ததற்கும் சம்பவ இடத்தில் இருந்தேன் என்பதற்கும் ஆதாரம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து குறித்து காவல் நிலையத்தில் நான் புகார் கொடுக்கவில்லை. யார் புகார் கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. விபத்து குறித்த குற்றவியல் நீதிமன்றத்தில் நான் சாட்சியம் ஏதும் அளிக்கவில்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை. விபத்து குறித்த சாட்சி பட்டியலில் என் பெயர் இல்லை. விபத்து நடந்த சாலையானது சுமார் 10 அடி சாலையாகும். இறந்து போனவர் சென்ற வாகனத்தில் பக்கவாட்டு கண்ணாடிகள் இல்லை என்று சொன்னால் அது பொருத்து எனக்கு தெரியாது. இறந்து போன நபர் சென்ற வாகனமானது சாலையின் மையப்பகுதியில் சென்றது என்றால் சரியல்ல. சாலையின் இடது புறத்தில் தான் சென்று கொண்டிருந்தது. அந்த வாகனம் ஊதா நிறமுடைய Scooty வாகனமாகும். இறந்த போனவருக்கு தலையின் பின்பகுதியில் தான் காயம் ஏற்பட்டது. தலைகவசம் அணிந்திருந்தால் அவருக்கு பின் தலையில் ஏற்பட்ட காயத்தை தவிர்த்திருக்கலாம் என்றால் சரிதான். இறந்து போன நபர் பயணம் செய்த வாகனத்தை ஓட்டிய நபர் தான் திடீரென்று வலது புறத்தில் வாகனத்தை திருப்பியதால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. இறந்து போன நபர் பயணம் செய்த வாகனத்தை ஓட்டிய நபருக்கு விபத்து சமயத்தில் ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இறந்து போனவரின் மகள் தான் இருசக்கர வாகனத்தை விபத்து சமயத்தில் ஓட்டினார் என்றால் சரிதான். இறந்து போன நபர் பயணம் செய்த வாகனத்தை ஓட்டிய நபரின் அஜாக்கிரதையால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றும், 1ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநரால் விபத்து ஏற்படவில்லை என்றும்

சொன்னால் சரியல்ல. பார்க்காத விபத்தை பார்த்ததாக மனுதாரருக்கு உதவும் நோக்கில் இழப்பீடு பெறவேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும், என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

x

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.